2013 செப்ரெம்பர் 7ஆம் திகதி ரோனி அபொட் பிரதமராக பதவியேற்றதுடன், புதிய அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவானது. புதிய அரசாங்கம் சட்டவிரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவை அடைபவர்களை நிர்வகிப்பதற்கான கடுமையானதொரு புதிய கொள்கையை அறிமுகம் செய்தது. அது இறையாண்மை எல்லைகள் நடவடிக்கை (Operation Sovereign Borders - OSB) என்பதாகும்.

**'இறையாண்மை எல்லைகள் நடவடிக்கையில் கடுமையானது என்ன?**

இறையாண்மை எல்லைகள் நடவடிக்கை என்பது, அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இராணுவம் வழிநடத்தும் புதிய பாதுகாப்பு முன்முயற்சியாகும். படகுகளைத் தடுத்து நிறுத்துவதும், குற்றவாளிகள் கைகளில் சிக்கி மக்கள் கடலில் உயிராபத்தை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதும், அவுஸ்திரேலிய குடியவரவுத் திட்டத்தின் கௌரவத்தைப் பேணுவதும் இதன் நோக்கங்களாகும்.

**புதிய கொள்கை முன்னைய கொள்கையிலிருந்து வேறுபடுவது எவ்வாறு?**

பப்புவா நியூ கினியா மற்றும் நௌறு அரசாங்கங்களுடன் இணக்கப்பாட்டுடனான பங்காளித்துவம் செயற்படும் நிலையில் உள்ளது. இதன் பிரகாரம், கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் வருபவர்கள் மதிப்பீடுகளுக்காக பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். புதிய கொள்கையின் ஊடாக துரித இடமாற்ற செயன்முறை அறிமுகமாகிறது. அதன் பிரகாரம், அவுஸ்திரேலியாவை அடையும் புகலிடக் கோரிக்கையாளர்கள் 48 மணித்தியாலங்களில் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த இரு இடங்களிலும் இயங்கும் மதிப்பீட்டு நிலையங்களை விஸ்தரித்தலும், புகலிடக் கோரிக்கையாளர்களுடன் கூடிய படகுகளை திருப்பி அனுப்புவதும் புதிய கொள்கையில் உள்ளடங்கும்.

**அவுஸ்திரேலியா, பப்புவா நியூ கினியா, நௌறு ஆகியவற்றிற்கு இடையிலான ஏற்பாடுகள் யாவை?**

அவுஸ்திரேலியாவும் பப்புவா நியூ கினியும் மற்றும் அவுஸ்திரேலியாவும் நௌறுவும் கைச்சாத்திட்ட ஏற்பாடுகளானவை சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வரும் சகலரையும் பப்புவா நியூ கினிக்கு அல்லது நௌறுவிற்கு அனுப்பி மதிப்பீடு செய்யவும், அகதியாக இனங்காணப்படுபவரை அங்கு குடியேற்றவும் வழிவகுக்கின்றன.

அகதிகளாக இனங்காணப்படாதவர்கள் தாய்நாட்டுக்கு அல்லது வதிவிட உரிமை கொண்ட நாடொன்றிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

**புதிய விதிமுறைகள்**

அவுஸ்திரேலியாவானது பிராந்திய மதிப்பிடல் நிலையங்களை விஸ்தரிப்பதற்காக பப்புவா நியூ கினி மற்றும் நௌறுவுடன் பணியாற்றி வருவதுடன், மேலதிக வசதிகளை அமைப்பதற்கு புதிய இடங்களைத் தேடி வருகிறது. இது போதியளவு கடல் கடந்த மதிப்பிடல் வசதிகளை ஏற்படுத்துவதுடன், 48 மணித்தியால துரித இடமாற்ற நடைமுறையின் தேவைகளை சமாளிக்கவும் இடமளிக்கும்.

**பப்புவா நியூ கினி மற்றும் நௌறுவிற்கான 48 மணித்தியால இடமாற்றம் பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கும் ஏற்புடையதா?**

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவை அடையும் சகலரும் பப்புவா நியூ கினியா மற்றும் நௌறுவிற்கு இடமாற்றப்படக் கூடியவர்கள். பிள்ளைகள் மற்றும் குடும்பக் குழுக்களுக்கு இடமாற்றத்தில் இருந்து விலக்களிக்கப்படமாட்டாது. விசா இல்லாமல் படகு மூலம் அவுஸ்திரேலியாவை அடைகின்ற எவரும் அந்நாட்டில் குடியமர்த்தப்பட மாட்டார்கள்.

**துணையில்லாமல் வரும் சிறார்களுக்கு என்ன நடக்கும்?**

கடல்கடந்த நாடுகளில் மதிப்பிடுதலுக்கான நடைமுறையில் எவருக்கும் விலக்களிப்புக்கள் கிடையாது. துணையில்லாமல் வந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவை அடையும் சிறார்களும் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு இடமாற்றப்படக்கூடும். துணையில்லாமல் வரும் சிறார்கள் பிராந்திய மதிப்பிடல் நிலையங்களுக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய ஏற்பாடுகள் அடங்கிய சட்டகத்தை உருவாக்குவதற்காக அவுஸ்திரேலிய அதிகாரிகள் பப்புவா நியூ கினியா மற்றும் நௌறு அதிகாரிகளுடன் நெருங்கிப் பணியாற்றி வருகிறார்கள்.

**திரும்பிச் செல்லுமாறு படகுகளுக்கு உத்தரவிடப்படுமா?**

அவுஸ்திரேலியாவில் அரசாங்கம் மாறியுள்ளதால் விதிமுறைகளும் மாறியிருக்கின்றன. நீங்கள் விசா இல்லாமல் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு வந்தால், நீங்கள் வழிமறிக்கப்படுவீர்கள். நீங்கள் திருப்பி அனுப்பப்படலாம் அல்லது மதிப்பீடுகளுக்காக விரைவில் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு இடமாற்றப்பட்டலாம். நீங்கள் ஒருபோதும் அவுஸ்திரேலியாவில் குடியமர்த்தப்பட மாட்டீர்கள்.

**நான் அவுஸ்திரேலியாவில் குடியமர்த்தப்படும் தகுதியைப் பெறுவேன் என்று ஆட்கடத்தல்காரர்கள் சென்னார்களே?**

ஆட்கடத்தல்காரர்களின் பொய்களை நம்ப வேண்டாம். அவர்களுக்கு உங்களது பணமே தேவை. நீங்கள் விசா இல்லாமல் அவுஸ்திரேலியாவிற்கு வருவீர்களானால், உங்கள் வாழ்க்கை அடங்கலாக, சகலவற்றையும் இழக்கும் அபாயத்தை எதிர்கொள்வீர்கள்.

**ஏற்கெனவே அவுஸ்திரேலியாவில் உறவினர்கள் இருந்தால் என்ன நடக்கும்? உறவினர்களுக்கு விசா இருந்தால் ஏதேனும் மாற்றம் நிகழுமா?**

எவருக்கும் அவுஸ்திரேலியாவில் (பிள்ளைகள், குடும்பங்கள், துணையில்லாத சிறார்கள் அடங்கலாக) குடும்பமொன்று இருக்கும் பட்சத்திலும் மாறுதல் ஏற்படப் போவதில்லை. அங்கு வரும் எவரும் வந்த நேரத்தில் இருந்து 48 மணித்தியாலங்களுக்குள் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு இடமாற்றப்படுவார்கள்.

**புகலிடக் கோரிக்கையாளர்கள் பிரதான நிலப்பரப்பை அடைந்தால் என்ன நடக்கும்? அவர்கள் புதிய ஏற்பாடுகளுக்கு அமைய பப்புவா நியூ கினியா அல்லது நௌறுக்கு இடமாற்றப்படும் நிலையை எதிர்கொள்வார்களா?**

புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் படகு மூலம் அவுஸ்திரேலியாவின் எவ்விடத்தை அடைகிறார் என்பது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவர் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு இடமாற்றப்படுவார்.

**அத்தகையோர் உண்மையான அகதிகள் அல்லவென இனங்காணப்பட்டால் என்ன நடக்கும்?**

அகதிகளாக இனங்காணப்படாதவர்கள் சொந்த நாட்டுக்கு அல்லது தாம் வதிவிட உரிமை கொண்ட நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள்.

**புதிய ஏற்பாடுகளின் கீழ் பப்புவா நியூ கினியாவிற்கு அல்லது நௌறுவிற்கு எத்தனை பேரை இடமாற்ற முடியும்?**

இடமாற்றக்கூடியவர்களின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு கிடையாது. இரு நாடுகளிலும் உள்ள வசதிகள் தொடர்ச்சியாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. புதிய ஏற்பாடுகளின் கீழ் பப்புவா நியூ கினியா அல்லது நௌறுவிற்கு இடமாற்றப்படும் அல்லது அங்கு குடியமர்த்தப்படுவோரின் எண்ணிக்கை மீதாக கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது.

**நான் அவுஸ்திரேலியா அல்லது வேறெந்த நாட்டில் நிரந்தர வதிவிட உரிமையைப் பெறுவது எவ்வாறு?**

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் (UNHCR) அல்லது புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச ஸ்தாபனத்தில் (IOM) தமது கோரிக்கையைப் பதிவு செய்வதன் ஊடாக சரியான செயன்முறையை அனுசரிக்க முடியும்.